முருகப்பெருமான் துணை

**மகான் திருமூலதேவர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

23.09.2021, வியாழக்கிழமை

1. ஓங்கார பிரம்மமே அரங்கா
ஓம் என்ற சக்தியே தேசிகா
ஓங்காரன் அவதாரமாக வந்த
ஓங்கார ஞானியே குருராசா
2. அரசனே உன்பெருமை கூறி
அகிலமதில் பிலவ தரிவை திங்கள்
வரமென சப்தம திகதி குருவாரம்
(பிலவ வருடம் புரட்டாசி மாதம் 7ம் நாள், 23.09.2021, வியாழக்கிழமை)
வழங்குவேன் திருமூலதேவர் யானும்
3. யானும் துல்லிய ஆசி தன்னை
உலகோர் நலம் காண உரைப்பேன்
வானவர்கள் துணைகள் பெற்று
வாசிவசம் சர்வ சித்திகள் அடைய
4. அடையவே குருமார்கள் தயவுடன்
ஆறுமுகன் ஆசி வேண்டுமப்பா
தடையற இந்த வரம் பெற
தவசி அரங்கன் காட்டும் வழி
5. வழியாம் சுத்த சன்மார்க்க நெறி
வளமும் நல்ல மனபலம் பக்குவம்
தெளிவு திடம் தரும் தரும நெறி
தேசிகன் ஆசிபட ஏற்று மக்கள்
6. மக்கள் தொடர்ந்து பின்பற்றி
மண்ணுலகில் சரவணச் சுடரேற்றி
தேக்கமின்றி நித்ய வழிபாடு பூசை
தெரிவிக்க உலகோர் செய்து வர
7. வருகவே அவரவர் வினைகள்
வருமுலகில் அகன்று மேவி
தருமபலம் பெருகி உலகோர்க்கு
தணிகாசலன் அருளும் தயவும் கிட்டி
8. கிட்டியே ஞான பலமுடன்
குறையிலா வாசி வசமாகி
தட்டாது ஜீவ முக்தி நிலை
தவசி மார்க்கத்தால் எட்டும்

9. எட்டுமே அரங்கன் வழிவழி
எண்ணிலா கோடி ஞானவான்கள்
எட்டுத்திக்கும் இனிதே உருவாகி
இணையிலா உலக மாற்றமதும்

10. மாற்றமதும் ஞானிகள் ஆட்சியாக
மண்ணுலகம் அடைந்து சிறக்கும்
ஆற்றல்பட தருமபலம் கூடிட
ஆளுமைகள் நல்லோர் தொடர்பில்

11. தொடர்பில் ஞானசித்தர் காலம்
தேசிகன் வேண்டலாகக் கனிந்து
இடரில்லா ஞானபூமி ஞானஆட்சியாக
இவ்வுலகம் அடைதல் காண்கும்

துல்லிய ஆசி முற்றே

–சுபம்–